[1992 மார்ச் 13

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ராஜபாளையம் தொகுதியில் உள்ள எஸ். ராமலிங்காபுரம் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள கோபாலபுரம், குறுச்சியார்பட்டி, சிவலிங்கபுரம், வடகரை போன்ற கிராமங்களில் உள்ளவர்கள், குறிப்பாகத் தாய்மார்கள் பசு மாடுகளை வளர்த்து, அதன்மூலம் வருவாயை ஈட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எஸ். இராமலிங்காபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் கிட்டத்தட்ட 10,000-க்கும் மேலான கால்நடைகள் இருப்பதால் அங்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க, இந்த வருஷம் இல்லாவிட்டாலும், வரும் நிதி ஆண்டிலாவது அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் ஒன்றியத்திலிருந்து கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான தீர்மானத்தைப் போட்டு, முழு வடிவில் பிரேரணையை அனுப்பி வைக்குமாறு விருதுநகர் மண்டல இணை இயக்குநரிடம் கேட்கப்பட்டுள்ளது. பிரேரணை வருமானால் எஸ். ராமலிங்காபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ். ராமலிங்காபுரத்தில் கால்நடை மருத்துவமனையை பெர்மனன்டாக அமைப்பதற்கு முன்னால் டெம்பரரியாக வாரத்திற்கு ஒருமுறை மொபைல் கால்நடை மருத்துவமனை செட்டப் வந்தால், அங்கேயுள்ள கால்நடைகளுக்கு நன்மையாக இருக்கும். இதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 217, திருமதி என். சி. கனகவல்லி, மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

விளாத்திக்குளம் மீனவர்களுக்கு படகுகள்.

217—

*4938 திருமதி என். சி. கனகவல்லி ;

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விளாத்திக்குளம் தொகுதி மீனவர்களுக்கு படகுகள், மீன்பிடி சாதனங்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

1992 மார்ச் 13]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

பொதுவாக மீனவர்கள் அந்த வட்டாரத்திலுள்ள மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து வங்கிக் கடன் ஒப்புதலுடன் அருகிலுள்ள மண்டல மீன் துறை உதவி இயக்குநருக்கு உரிய முறையில் அனுப்பும் விண்ணப்பங்களுக்கு நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து, படகுகள் மற்றும் வலைகள் வாங்க அரசு மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

திருமதி என். சி. கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளாத்திகுளம் தொகுதியில் கடற்கரை ஓரமாக வாழும் மீனவர்கள் சொந்தமாகத் தொழில் செய்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள அவர்களுக்கு மீன் பிடிக்கும் சாதனங்களையும், படகுகளையும் அரசு வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990–91-ல் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கவில்லை. ஆனால் நமது ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ரூ. 1,20,500 ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் பாரம்பரிய கட்டுமர மீனவர்கள் நைலான் வலை மற்றும் வெளிப் பொறுத்தும்–உட் பொறுத்தும் இயந்திரங்கள், விசைப் படகுகள் மற்றும் கட்டு மரங்கள் வாங்க நிதி உதவி செய்யப்படுகிறது. இந்த விளாத்திகுளம் தொகுதியைப் பொறுத்தவரையில் வலைகள் வாங்க, வங்கி மூலம் கடன் கேட்டு மீனவர்களிடமிருந்து தூத்துக்குடி உதவி இயக்குநருக்கு இதுவரை விண்ணப்பங்கள் எதுவும் தரப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–25

திருமதி என். சி. கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைப்படகுகள், மீனவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. பதிலாக வசதி படைத்தவர்களுக்கு, தனியார்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மீனவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் ஆக இருந்தால்தான் வழங்கப்படுகிறது. எனினும் இது குறித்து மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் இல்லாதவர்களுக்குக் கடன் வழங்

கப்பட்டிருப்பதாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திக்குளம் மீனவர்களுக்கு மட்டுமா இந்தப் பயன்? அல்லது தமிழகத்தில் உள்ள அனைத்து மீனவர்களுக்கும் கொடுக்கப்படுமா? Fish Farmers களுக்கும் அந்தக் கடன் வசதி செய்து தரப்படுமா என்பதை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே Fish Farmer என்று சொல்லக்கூடிய உள்நாட்டு மீனவர்களுக்கு வசதிகளை மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் உள்நாட்டு மீனவர்களை வளப்படுத்த அவர்களுக்கு வருவாய்த்துறை குளங்கள் மற்றும் பொதுப்பணித் துறை குளங்கள்குத்தகைக்கு விடப்பட்டு பல்வேறு வசதிகளும் மீன் குஞ்சுகளும்வாங்க கடன் உதவியும் அளித்து, மானியமும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 218 திருமதி வி. ஜி. மணிமேகலை, மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர்.

218—

தமிழ்பாடியில் தொழிற்பேட்டை.

*4523 திருமதி வி. ஜி. மணிமேகலை :

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சுழியில் உள்ள தமிழ்பாடியில் தொழிற்பேட்டை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக்கழகத்தால் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழகம் தொழில் துறையில் பொற்கால் சகாப்தம் படைக்க பல்வேறு சலுகைகளை வாரி வழங்கியுள்ள தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு